# ஹரம் அல் ஷரீபுடனான யூதர்களின் பிணைப்புக்களை புறக்கணித்து, அதன் வரலாற்று ரீதியான மாற்றமடையாத நிலைப்பாட்டை நிலைநிறுத்தும் வகையிலான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள ஐக்கிய நாடுகள் சபை

## லத்தீப் பாரூக்

இம்மாத முற்பகுதியில் டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரபியில் ஹரம் அல் ஷரீப் என அழைக்கப்படும் வளாகத்துடனான யூதர்களின் உறவுகளைப் புறக்கணித்து, அதனை மலைக்கோயில் என உரிமை கோரும் இஸ்ரேலைக் கண்டிக்கும் வகையில் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

உலகில் ஐக்கிய நாடுகள் தீர்மானங்களை மீண்டும் மீண்டும் மீறும் ஒரு நாடாகவும், ஐக்கிய நாடுகள் சபையால் அதிகம் கண்டனத்துக்கு உள்ளாகி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட ஒரு நாடாகவும் இஸ்ரேல் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் சுமார் 115 தீர்மானங்கள் இஸ்ரேலுக்கு எதிரானவை. ஏனைய நாடுகளுக்கு எதிராக இதுவரை சுமார் 45 தீர்மானங்கள் மட்டுமே நிறைவேறி உள்ளன.

ஹரம் அல் ஷரீப்பின் வரலாற்று ரீதியான அந்தஸ்த்து நிலையை மாற்றக் கூடாது என்ற வகையில் இந்தத் தீர்மானங்கள் அமைந்துள்ளன. ஜெரூஸலம் நகரில் தனது சட்டங்களை நிறைவேற்ற இஸ்ரேல் எடுக்கும் எந்தவொரு முயற்சியும் சட்டவிரோதமானது என்றும் இந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக பொதுச் சபையின் 129 நாடுகள் வாக்களித்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 31 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

1948க்கு முன் இஸ்ரேல் என்று ஒரு நாடு இருக்கவில்லை. இப்போது நாம் இஸ்ரேல் என்று கூறுவது பலஸ்தீன முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் நல்லிணக்கத்தோடும் சமாதானத்தோடும் காலாகாலமாக வாழ்ந்த பாரம்பரியம் மிக்க பலஸ்தீன தாயகமாகும். இந்தப் பகுதி உற்பட மத்திய கிழக்கின் பெரும்பாலான பகுதிகள் அன்று துருக்கிப் பேரரசின் கீழ் இருந்த பகுதிகள். 1516 முதல் 1917 வரை பலஸ்தீனம், ஜெரூஸலம் என எல்லா பகுதிகளுமே துருக்கிப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் தான் இருந்தன.

முதலாம் உலக யுத்தத்தின் பின் துருக்கிப் பேரரசு தோற்கடிக்கப்பட்டது. அதன் பிறகு பலஸ்தீனம் உற்பட பெரும்பாலான பகுதிகள் பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. பிரிட்டன் தனது யூத சகாக்களோடு இணைந்து உலகின் பல பாகங்களில் சிதறி வாழ்ந்த யூதர்களை பலஸ்தீனத்துக்கு அழைத்து

வந்து குடியமர்த்தியது. இந்த செயற்பாடுகளின் போது நூற்றுக் கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து பலவந்தமாகத் துறத்தப்பட்டனர். இவ்வாறு தான் பலஸ்தீன மக்களின் பூர்விகத் தாயக பூமி அந்த மக்களிடமிருந்து யூதுர்களால் பலவந்தமாகப் பறிக்கப்பட்டது.

இதன் தொடராக 1948ல் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையின் பல நாடுகளை அச்சுறுத்திப பலஸ்தீனத்தைப் பிரித்து இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றிக் கொண்டது. இது தான் பலஸ்தீனர்களை தமது சொந்த பூமியிலேயே அகதிகளாக்கிய சோக வரலாறு.

யூதர்கள் ஜெரூஸலம் நகரையும் இஸ்ரேலின் தலைநகராக உரிமை கோரினர். 1967ல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா தலைமையிலான நேச அணிகளின் ஆதரவோடு இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தம் மூலம் இஸ்ரேல் ஜெரூஸலத்தையும் தன் வசமாக்கிக் கொண்டது. அன்று முதல் அல் அக்ஸா பள்ளிவாசலை தகர்ப்பதற்கு இஸ்ரேல் சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. இது உலக முஸ்லிம்களின் மூன்றாவது புனித ஸ்தலமாகும். அந்த இடத்தில் தமக்கான ஒரு ஆலயத்தை நிறுவுவது தான் இஸ்ரேலின் நோக்கமாகும்.

டிசம்பர் ஐந்தில் ஐ.நா பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள மூன்று தீர்மானங்களில் ஒன்று பலஸ்தீன இஸ்ரேல் முரண்பாட்டோடு நேரடியாக தொடர்புடையது. ஏனைய இரண்டும் கோளான் குன்று பிரதேசத்துக்கு இஸ்ரேல் உரிமை கோருவதை கைவிட வேண்டும் என்பதாகும். இந்தப் பகுதி 1967ல் இடம்பெற்ற ஆறு நாள் யுத்தத்தின் போது இஸ்ரேல் கைப்பற்றிய பகுதியாகும். பலஸ்தீனமும் இஸ்ரேலும் தமக்கு இடையில் நீண்ட நாற்களாக நீடித்து வரும் முரண்பாடுகளை சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்ள அதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற வகையில் மற்ற தீர்மானம் அமைந்துள்ளது.

ஐ.நா சபையில் டிசம்பர் ஐந்தில் நிறைவேற்றப்பட்ட தீhமானங்களின் சாராம்சம் வருமாறு

1. ஜெரூஸலம் : இந்த நகரில் பலஸ்தீன நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளமை பற்றியும் அதேபோல் இங்கு இஸ்ரேலிய குடியேற்றவாசிகளால் புனிதப் பிரதேசம் உட்;பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் மற்றும் தூண்டுதல்கள்  பற்றியும் அதிக கரிசணை வெளிப்படுத்தப்படுகின்றது.

2. பலஸ்தீன விவகாரம் பற்றிய சமாதானமான தீர்வு : இஸ்ரேலிய குடியேற்ற செயற்பாடுகளின் சட்டவிரோத போக்கையும், இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் குடிப்பரம்பல் போக்கை மாற்றி அமைக்கும் தன்னிச்சையான செயற்பாடுகள்,  ஜெரூஸலம் நகரின் அந்தஸ்த்து மற்றும்

பண்புகளையும் ஒட்டு மொத்தமாக கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிராந்தியத்தின் குடிப்பரம்பல் போக்கையும் மாற்றி அமைக்கும் தன்னிச்சையான செயற்பாடுகள் என்பனவற்றின் சட்டவிரோத போக்கையும் மீள் உறுதி செய்வதோடு இவற்றை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அத்தோடு பலஸ்தீன பொது மக்களுக்கு எதிராக சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் குறிப்பாக சிறுவர்கள் விடயத்தில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் என்பனவற்றையும் கண்டிக்கின்றோம்.

3. சிரியாவின் கோளான் : 1967 முதல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சிரியாவின் கோளான் குன்றுப் பகுதியில் இருந்து இஸ்ரேல் இன்னமும் வெளியேறாமை குறித்து பெரும் அக்கறையும் கவலையும் வெளியிடப்படுகின்றது.

பலஸ்தீன தூதுவர் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ளார். “கைப்பற்றப்பட்ட ஜெரூஸலம் பலஸ்தீன தேசத்தின் ஒரு பிரதான முக்கிய பகுதியாக முன்னரும் இருந்துள்ளது. எதிர்காலத்திலும் அவ்வாறே இருக்கும். பலஸ்தீன தேசத்தின் நிரந்தர தலைநகராகவும் அது இருக்கும்” என்று பலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் றியாத் அல் மாலிகி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் உள்ள பலஸ்தீனத்தின் நிரந்தர அவதானி றியாத் எச் மன்சூர் குறிப்பிடுகையில் பலஸ்தீன் விடயத்தைப் பொருத்தமட்டில் ஐக்கிய நாடுகள் சபையிடம் தெளிவான முக்கிய பொறுப்புக்கள் உள்ளன. வரலாற்று முக்கியத்துவம் மிக்க பலஸ்தீனத்தை பிரிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முடிவை அடுத்து பலஸ்தீன மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பேரழிவு 74 ஆண்டுகள் கழிந்தும் தொடருகின்றது. இன்றைய நிலையில் நம்பகரமான அரசியல் அடிவானம் ஒன்று தென்படாமல் இருப்பதே மோதல்கள் நீடிக்க முக்கிய காரணம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். சர்வதேச சட்டங்களை எல்லாம் மீறி ஐக்கிய நாடுகள் தீர்மானங்களையும் புறக்கணித்து எந்த விளைவுகளும் இல்லாமல் தப்பிக் கொள்ளலாம் என்று இஸ்ரேல் நம்புகின்றது. தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பில் அது வேரூன்றி நிற்கின்றது. பலஸ்தீன மக்களை தொடர்ந்தும் இடம்பெயர வைத்து, அவர்களது இடத்தில் வேறு மக்களை குடியேற்றும் திட்டத்தை இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இஸ்ரேல் கடந்த பல தசாப்தங்களாகத் தொடருகின்றது என்று கூறுகின்றார்.

பலஸ்தீனப் பொது மக்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் காயப்படுத்தப்பட்டாகள் என்பதையும் அவர் விளக்கி உள்ளார். இஸ்ரேலிய விமானத் தாக்குதல் மூலம் ஆயிரக்கனக்கான பலஸ்தீன வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பலஸ்தீள நகரங்களையும் கிராமங்களையும் அவர்கள் தஞ்சம் புகுந்துள்ள அகதி முகாம்களையும் கூட இஸ்ரேல் படை வீரர்கள் முழு அளவில் வன்முறைகளைப் பிரயோகித்து அன்றாடம் தாக்கி வருகின்றனர். சட்ட விரோதமான முறையில் குடி அமர்த்தப்பட்ட யூத ஆயுதபாணிகளும் மற்றும் தீவிரவாதிகளும் ஆக்கிரமிப்பாளர்களின் கூலிப்படைகளாகச் செயற்பட்டு

பலஸ்தீன மக்களை அன்றாடம் அச்சுறுத்தி வருகின்றனர் என அவர் விளக்கினார்.

காலணித்துவ குடியிருப்புக்கள் தொடர்ந்து நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. 2016ல் ஐ.நா பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு ஐந்தாண்டு காலத்தில் 60 ஆயிரத்தக்கும் மேற்பட்ட மேலதிக இஸ்ரேல் குடியேற்றவாசிகள் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பூமியில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். ஜெரூஸலத்தின் குடிப்பரம்பல், பண்புகள், வரலாறு மற்றும் தனித்தவம் என்பனவற்றை சட்ட விரோதமான முறையில் மாற்றி அமைக்கும் நடவடிக்கைககளையும் இஸ்ரேல் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. சுமார் 15 வருடங்களுக்கு மேலாக காஸா பகுதியையும் இஸ்ரேல் முடக்கி வைத்துள்ளது. இங்கு சுமார் இரண்டு மில்லியன் மக்கள் அடைபட்டுள்ளனர். இவ்வாறு பலஸ்தீன மக்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமைகளை துச்சமென மதித்து இஸ்ரேல் துணிச்சலாக மீறிக் கொண்டிருக்கின்றது.

மேலும் விளக்கமளித்த அவர், தொடர் வன்முறைகளுக்கு பின் விளைவுகளும் உள்ளன. இஸ்ரேலை சமாதானப்படுத்தி அதன் அத்துமீறல்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படுவதை நிறுத்திக் கொள்ளும் நேரம் வந்து விட்;டது. இஸ்ரேலின் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதை நாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இஸ்ரேல் எது? 1967க்குப் பின் அது ஆக்கிரமித்த பகுதிகள் எவை? என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசங்களை சம்பந்தப்பட்ட நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சர்வதேச சமூகம் இன்றைய நிலையை போன்ற பலஸ்தீன பொது மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவிக்கும் இன்னொரு வருடம் கழிவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அடுத்த தலைமுறையும் இழக்கப்படுவதை சர்வதேச சமூகம் தடுக்க வேண்டும் என றியாத் எச் மன்சூர் வேண்டுகோள் விடுத்துள்ளார். **(முற்றும்)**